அரசாங்க அழுத்தகர்,

அரசாங்க அச்சுத் திணைக்களம்,

கொழும்பு – 08

## அறிவித்தல் 2025
## வவுனியாவடக்கு பிரதேச சபை

எமது சபையின் 2025 ஆம் ஆண்டிற்கான அறவிடற்பாலதான கட்டணங்களும், அறிவித்தல்களும் தொடர்பான கீழ் வரும் விளம்பரங்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. விளம்பரப்படுத்துதல் செய்வதற்காக இதனை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகை பகுதி IV உள்ளூராட்சியில் பிரசுரிக்குமாறும், அதில் நான்கு பிரதிகள் எமக்கு அனுப்பி வைக்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

1. மிருகவதைக் கட்டளைச் சட்டம் (272ம் அத்தியாயம் 7(2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்
2. விளம்பர அறிவித்தல் கட்டணம் 2025.
3. கட்டிட அனுமதி 2025.
4. நாய்கள் பதிவுக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 477)
5. தேசிய சூழல் சட்டத்தின் கீழான அறிவித்தல்
6. 2025ஆம் ஆண்டிற்கான உரிமக் கட்டண அறவீடு விபரம்
7. 2025 ஆம் ஆண்டிற்கான வியாபார வரி அறவீட்டு விபரம்
8. தொலைத்தொடர்பு கம்பங்களின் அறவீடு
9. கழிவுப்பொருட்கள் அகற்றும் கட்டளைச் சட்டம்
10. குழாய்க்கிணறு சேவைக்கட்டணம் அத்தியாயம் 109(ஈ)
11. வாகனங்கள் மீதானவரி 148 (4)ம் அட்டவணை
12. துவிச்சக்கரவண்டி உரிம அறவீடு 148(4ம்) அட்டவணை
13. அசைவற்ற சொத்துக்களுக்கான அறிவித்தல்.
14. கட்டாக்காலி கால்நடைகள் கட்டுப்படுத்துதல்
15. இடங்களை தெரிவு செய்து வெளிப்படுத்தல்
16. மலம் அகற்றுவதற்கான கட்டணஅறிவித்தல்
17. இடங்களை வரையறை செய்தல்
18. வாகனங்கள் மீதான வாடகை வரி அறிவித்தல்-2025
19. நீர் வழங்கலுக்கான அறிவித்தல்-2025
20. கலாச்சார மண்டபத்திற்கான வாடகை அறிவித்தல் - 2025
21. களியாட்டவரி அறவிடுவதற்கான அறிவித்தல் - 2025
22. ஏனைய கட்டணங்கள் - 2025

திருமதி சோ.மணிவண்ணன்,

செயலாளர்,

வவுனியா வடக்கு பிரதேசசபை,

நெடுங்கேணி.

24.12.2024

# வவுனியா வடக்கு பிரதேச சபை
# மிருகவதைக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272)
# 7 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் - 2025

**நி.க.இல 228**

வவுனியா வடக்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் பிரதேச சபையால் சித்தி பெற்ற குத்தகையாளருக்கு வழங்கப்பட்ட எந்தவொரு இறைச்சிக் கடையும் மிருகவதைச் சட்டத்தின் (அத்தியாயம் 272) 17(1) பகுதியின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, குறிப்பிட்ட அட்டவணைப் பிரகாரம் குறிப்பிட்டுள்ள திகதிகளிலும், அரசினால் பிரகடனப்படுத்தப்படும் திகதிகளிலும், என்னால் இடைக்கிடையே அறிவிக்கப்படும் தினங்களிலும், மிருகங்களை விற்பனை செய்தலும் விற்பனைக்காக இறைச்சியை தொங்கவிடப்படுதலும் இறைச்சி விற்பனை செய்யும் இடங்களைத் திறந்து வைத்தலும் அறவே தவிர்க்கப்பட வேண்டும் என அறியத்தரப்படுகின்றது.

**அட்டவணை**

1. இலங்கை சுதந்திரதினம்
2. மகாசிவராத்திரி தினம்
3. வெசாக் முழு நோன்மதி தினங்கள் (அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்படும் தினங்கள் )
4. உலக மிருகதினம்
5. மாதாந்த நோன்மதி தினம்

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024

## வவுனியா வடக்கு பிரதேச சபை

## விளம்பர அறிவித்தல் கட்டணம் – 2025

நி.க.இல 228

1987 ஆண்டின் பிரதேச சபைச் சட்டத்தின் 126 - 7C பிரிவின்கீழ் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு ஏற்ப 23.08.1988 ந் திகதியிட்ட 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரால் பகிரங்கப்படுத்தியுள்ள (62/A,63/A,64/A) பக்கங்களில் 17.04.1998 ஆந் திகதிய 1024 இலக்க வர்த்தமானிப் பத்திரிகை மூலம் என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விளம்பர அறிவித்தல் தொடர்பாக, துணைவிதியின் ஏற்பாடுகளின்படி வவுனியா வடக்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் யாராயினும் ஒருவரால் ஏதேனும் தெருவின்மீது அல்லது தெருவில் நீண்டிருக்கும் வண்ணம் விளம்பர அல்லது தெருவில் இருந்து நோக்கும்போது காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பலவகையினதும் வேறு தற்காலிக கட்டமைப்புக்களினதும் அல்லது எவ்வகையினதான எந்த அலங்காரத்தினதும், நிறுவுகையும் அல்லது நிறுவுகைக்கு ஏற்பாடு செய்தல் விடயத்திற்கு வவுனியா வடக்கு பிரதேச சபையினால் ஒரு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இது விடயமாக கீழ்வரும் அட்டவணையின் பிரகாரம் விளம்பரக் கட்டணங்கள் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதை இத்தால் பகிரங்கப்படுத்துகிறேன். இவ்வாறு இடப்படும் நிலையான விளம்பரங்கள் ஆண்டு தோறும் உரிய கட்டணத்தை செலுத்தி புதுப்பிக்கப்படல் வேண்டும் எனவும் அறியத்தரப்படுகின்றது.

1. சுவர் ஒன்றில் அல்லது பெயர்ப்பலகை ஒன்றில் காட்சிக்கு வைக்கும் நிரந்தர விளம்பர அறிவித்தல் ஒவ்வொரு சதுர அடிக்கும் ஒரு வருடத்திற்கு அல்லது ஒரு பகுதிக்கு (பெயர் பலகை ஒன்றில் இரு பக்கங்களிலும் அறிவித்தல் காட்சிக்கு வைக்கப்படின் இரு பக்கங்களிற்கு கட்டணம் அறிவிடப்படல் வேண்டும்) - **100.00**

2. ‘‘பெனர்’’ ஒன்றில் காட்சிக்கு வைக்கப்படும் தற்காலிக அறிவித்தல் ஒவ்வொரு சதுர அடிக்கும் ஒரு மாதத்திற்கு அல்லது அதன் பகுதிக்கு - **50.00**

3. ஒரு பலகையில் அல்லது ஒரு துணைசகிதம் காட்சிக்கு வைக்கும் மின்விளக்கு ஒளியுடன் கூடிய அறிவித்தலுக்கும் ஒவ்வொரு சதுர அடிக்கும் ஒரு வருடத்திற்கு அல்லது அதன் பகுதிக்கு - **150.00**

4. நிலையான வர்த்தக நிலையங்களில் விளம்பரங்களுடன் கூடிய பெயர் பலகை மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட பெயர் பலகைகளுக்கு சதுர அடிக்கு - **100.00**

5. விளம்பர அனுமதி விண்ணப்ப கட்டணம் 100.00

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

# வவுனியா வடக்கு பிரதேச சபை
# கட்டட அனுமதி – 2025

நி.க.இல 228

பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட இடங்கள் முழுவதும் 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 47 தொடக்கம் 59 வரையானதுடன், சேர்த்து வீடமைப்பு அபிவிருத்திக் கட்டளைச் சட்ட (அதிகாரம் 600) நடைமுறைகளும் 01.01.1998 ந் திகதியில் இருந்து எமது பிரதேச சபைக்கு ஏற்புடையதாக அமுலுக்கு வந்ததற்கு அமைவாக எனக்குள்ள தத்துவங்களையும், அதிகாரங்களையும் 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் அதிகாரங்களையும் கொண்டு சபை நிர்வாக எல்லைக்குள் வீடு கட்டுவதற்கு அல்லது எவையேனும் அமைப்புக்களை ஏற்படுத்துவதற்கு கட்டிட விண்ணப்பம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதன் பரிசோதனையின் சார்பிலும், ஏனைய விடயங்கள் சார்பிலும் கீழ்க்காட்டப்படும் அட்டவணைப் பிரகாரம் 2025.01.01ல் இருந்து கட்டணங்கள் அறவிடுவது என இத்தால் தீர்மானித்து அறியத்தரப்படுகின்றது.

**அட்டவணை**

| இல | விபரம் | 2025ம் ஆண்டிற்கான அறவீடு |
|---|---|---|
| 1. | வதிவிடத்திற்கு மதில் கட்டுவதற்கு (3000 சதுர அடிக்குள்) | **1750.00** |
| 2. | வதிவிடத்திற்கு மதில் கட்டுவதற்கு (3000 சதுர அடிக்கு மேல்) | **2000.00** |
| 3. | வர்த்தக நோக்கத்திற்கு மதில் கட்டுவதற்கு (3000 சதுரஅடிக்குள்) | **2000.00** |
| 4. | வர்த்தக நோக்கத்திற்கு மதில் கட்டுவதற்கு (3000 சதுரஅடிக்கு மேல்) | **2500.00** |
| 5. | 500 சதுர அடிக்கு மேற்படாத தளப்பரப்பைக் கொண்ட வதிவிட கட்டடங்களுக்கு | **1700.00** |
| 6. | 500 சதுர அடிக்கு மேற்படாத தளப்பரப்பைக் கொண்ட வர்த்தக கட்டடங்களுக்கு | **1800.00** |
| 7. | 500 சதுர அடிக்கு மேற்பட்ட 1500 சதுர அடிக்கு உட்பட்ட தளப்பரப்பைக் கொண்ட வதிவிட கட்டடங்களுக்கு | **2000.00** |
| 8. | 500 சதுர அடிக்கு மேற்பட்ட 1500 சதுர அடிக்கு உட்பட்ட தளப்பரப்பைக் கொண்ட வர்த்தக கட்டடங்களுக்கு | **2500.00** |
| 9. | 1500 சதுர அடிக்கு மேற்பட்ட 2500 சதுர அடிக்கு உட்பட்ட தளப்பரப்பைக் கொண்ட வதிவிட கட்டடங்களுக்கு | **2300.00** |
| 10. | 1500 சதுர அடிக்கு மேற்பட்ட 2500 சதுர அடிக்கு உட்பட்ட தளப்பரப்பைக் கொண்ட வர்த்தக கட்டடங்களுக்கு | **2500.00** |
| 11. | 2500 சதுர அடிக்கு மேற்பட்ட தளப்பரப்பைக் கொண்ட வதிவிட கட்டடங்களுக்கு ஒவ்வொரு 1000 சதுர அடிக்கும் அதன் பகுதிகளுக்கும் | **1000.00** |
| 12. | 2500 சதுர அடிக்கு மேற்பட்ட தளப்பரப்பைக் கொண்ட வர்த்தக கட்டடங்களுக்கு ஒவ்வொரு 1000 சதுர அடிக்கும் அதன் பகுதிகளுக்கும் | **1500.00** |
| 13. | கட்டிடத்தில் மாற்றம் செய்யப்படவுள்ளதும் ஆனால் தளப்பரப்பில் அதிகரிக்காததுமான வதிவிட கட்டடங்களுக்கு | **1000.00** |
| 14. | கட்டிடத்தில் மாற்றம் செய்யப்படவுள்ளதும் ஆனால் தளப்பரப்பில் அதிகரிக்காததுமான வர்த்தக கட்டடங்களுக்கு | **1500.00** |
| 15. | வதிவிட கட்டட விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டு ஒரு வருட கால எல்லைக்குள் பூர்த்தியாக்கப்படாமையால் மீளப் புதுப்பித்தல் கட்டணம் வருடம் ஒன்றிற்கு | 1000.00 |
| 16. | வர்த்தக கட்டட விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டு குறிப்பிட்ட கால எல்லைக்குள் பூர்த்தியாக்கப்படாமையால் மீளப்புதுப்பித்தல் கட்டணம் வருடம் ஒன்றிற்கு | **1000.00** |
| 17. | வர்த்தக கட்டடம் பூர்த்தியின் பின் குடியிருப்புச் சான்றிதழ் கோரின் அதற்கான கட்டணம் | **1500.00** |

| | | |
|---|---|---|
| 18. | வதிவிட கட்டடம் பூர்த்தியின் பின் குடியிருப்புச் சான்றிதழ் கோரின் அதற்கான கட்டணம் | **1000.00** |
| 19. | ஆதனம் சுவீகரிக்கப்படாத வீதி எல்லைக்கோட்டுச் சான்றிதழ் | **1500.00** |
| 20. | கட்டிட விண்ணப்பப் படிவக் கட்டணம் | **500.00** |
| 21. | கட்டட அனுமதி கால நீடிப்பு விண்ணப்ப கட்டணம் | 1000.00 |
| 22. | ஆதனம் சுவீகரிக்கப்படாமைக்கான சான்றிதழ் விண்ணப்ப கட்டணம் | 500.00 |
| 23. | வீதி எல்லைக்கோட்டு சான்றிதழ் விண்ணப்ப கட்டணம் | 500.00 |
| 24. | குடிபுகு சான்றிதழ் விண்ணப்ப கட்டணம் | 500.00 |
| 25. | கட்டட அனுமதி பஸ்தரிப்பு நிலையங்களுக்கு | 3000.00 |

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
12.12.2024.

## வவுனியா வடக்கு பிரதேச சபை
## நாய்கள் பதிவுக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272 )-2025

**நி.க.இல 228**

வவுனியா வடக்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் வளர்க்கப்படும் நாய்களுக்கு, நாய்கள் பதிவுக்கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 477) 4ம் பிரிவின்படி 2025ஆம் ஆண்டிற்கான பதிவுக்கட்டணம், அவைகள் ஆண் நாய்களோ, பெண் நாய்களோ எதுவாக இருப்பினும் நாய் ஒன்றிற்கு ரூபா 450/= ஆக விதிக்கப்பட்டுள்ளது. இக்கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

## வவுனியா வடக்கு பிரதேச சபை
## தேசிய சூழல் சட்டத்தின் கீழான அறிவித்தல் - 2025

**நி.க.இல 228**

1980 ஆம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகார சபையானது 1980 ஆம் ஆண்டின் 47 ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தினதும் 1988 ஆம் ஆண்டின் 56ம் இலக்க திருத்தச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின்படி மத்திய சூழல் தவிசாளரினால் குறித்த சட்டத்தின் 26ம் பிரிவிற்கமைவாகவும், உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு **2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ம் திகதி** தொடக்கம் கீழ்க்காட்டப்படும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரதேசசபையின் தலைவருக்கு கையளித்ததன் கீழ் வவுனியா வடக்கு பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள் இச்சட்டத்தை அமுல்படுத்துவதோடு, கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கைத்தொழில்கள் மீது மத்திய சூழல் அதிகாரசபையினால் குறித்துரைக்கப்பட்டவாறு, படிவங்கள், கட்டணங்கள், பரீட்சித்தற் கட்டணங்கள், உத்தரவுப் பத்திரக்கட்டணங்கள் ஆகியவை விதித்து அறவிடப்படல் செய்வது என இத்தால் தீர்மானித்து வெளிப்படுத்துகின்றேன். இவ் வெளிப்படுத்தல் ஆனது இதன் மூலம் அறவிடப்படும் கட்டணங்கள் 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின்கீழ் விதித்து அறவிடப்படும் உரிமக்கட்டணங்களைவிட மேலதிகமானதும் அவற்றை எவ்விதத்திலும் பாதிக்காததுமாகும்.

### அட்டவணை - 01

1. பத்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற மெழுகுவர்த்திகள் உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.
2. ஐந்து வேலையாட்களுக்குக் குறைவானவர்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற, பற்றிக் (சாயமிடல்) கைத்தொழிலகள்.
3. ஐந்து வேலையாட்களுக்குக் குறைவானவர்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்றவிடத்து வர்த்தக சலவைக்கூடங்கள்.
4. பத்துக்கு மேற்பட்ட நெசவுத்தறிகள் / இயந்திரங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட நெசவுத் தறிகள் /இயந்திரங்களைக் கொண்ட கைத்தறிகள் அல்லது பின்னல் அல்லது பூத்தையல் கைத்தொழில்கள்.
5. நாளொன்றிற்கு 200 லீற்ரருக்கு குறைவான உற்பத்தித் திறன்கொண்ட வர்த்தக மட்ட தேங்காய் எண்ணெய் பிரித் தெடுக்கும் கைத்தொழில்கள்.
6. தேங்காய் எண்ணெய் மற்றும் ஆயுர்வேத எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள் நீங்கலாக நாளொன்றுக்கு 10 லீற்றருக்குக் குறைவான உற்பத்தித்திறன் கொண்ட வர்த்தகமட்ட தாவர எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள்.
7. நாளொன்றிற்கு 100 லீற்றருக்குக் குறைவான உற்பத்தித் திறன்கொண்ட மதுசாரம் சாராத பானங்கள் உற்பத்திசெய்யும் அல்லது போத்தலில் அடைக்கும் கைத்தொழில்கள்.
8. நாளொன்றிற்கு 500 கிலோகிராம் அல்லது அதற்கு மேற்பட்ட உற்பத்தித் திறன்கொண்ட உலர் பதனிடுதல் தொழிற்பாடுகளைக் கொண்ட அரிசி ஆலைகள்.
9. மாதமொன்றுக்கு 1000 கிலோகிராமுக்கு குறைவான உற்பத்தித்திறன் கொண்ட அரைக்கும் ஆலைகள்.
10. பத்து அல்லது அதற்கு மேற்பட்டதும் 25 வேலையாட்களை விடக்குறைவானவர்கள் தொழிலுக்க அமர்த்தப்படுகின்றவிடத்து புகையிலைக் களஞ்சியங்கள் அல்லது சிகரட்டுக்கள்

அல்லது புகையிலை தொடர்பான வேறு உற்பத்திப் பொருட்களை உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

11. தொகுதியொன்றுக்கு 250 அல்லது அதற்கு மேற்பட்ட கிலோகிராம் ஊட்டல் திறன்கொண்ட கந்தகத் தூபமூட்டுதலுடன் கறுவா தூபமூட்டும் கைத்தொழில்கள்.
12. ஐந்து வேலையாட்களுக்கு மேற்பட்டவர்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற சமையல் உப்பு பொதியிடும் மற்றும் பதனிடும் கைத்தொழில்கள்.
13. ஐந்து வேலையாட்களுக்கு மேற்பட்டவர்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற வர்த்தக அடிப்படையிலான தேயிலை கலத்தல் /கலக்குதல் கைத்தொழில்கள்.
14. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டதும் 10 வேலையாட்களுக்குக் குறைவானவர்களுமான வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற உணவு உற்பததிசெய்யும் அல்லது பதனிடும் கைத்தொழில்கள்.
15. நாளொன்றுக்கு 250 கிலோகிராமை விடக் குறைவான மாவு உள்ளீட்டுத்திறன் கொண்ட வர்த்தக மட்டத்திலான வெதுப்பகங்கள் மற்றும் இனிப்புப்பண்ட தயாரிப்பிடங்கள்.
16. எச்சந்தர்ப்பத்திலும் 100 அல்லது அதற்கு மேற்பட்டதும் 500 முதிர்ச்சியடைந்த பறவைகளுக்குக் குறைந்ததுமான முதிர்ச்சியடைந்த பறவைகளைக் கொண்ட கோழிப்பண்ணைகள்.
17. எச்சந்தர்ப்பத்திலும் 05 அல்லது அதற்கு மேறபட்டதும் 10 முதிர்ச்சியடைந்த விலங்குகளுக்குக் குறைந்ததுமான பன்றிப்பண்ணைகள் அல்லது மாட்டுப் பண்ணைகள்.
18. எச்சந்தர்ப்பத்திலும் 25 அல்லது அதற்கு மேற்பட்டதும் 50 முதிர்ச்சியடைந்த விலங்குகளுக்குக் குறைவானதுமான முதிர்ச்சியடைந்த விலங்குகளைக்கொண்ட ஆட்டுப் பண்ணைகள்.
19. 100 அல்லது அதற்கு மேற்பட்டதும் 500 முதிர்ச்சியடைந்த விலங்குகளுக்குக் குறைவானதுமான மொத்தத்தைக் கொண்ட கலவன் பண்ணைகள்.

    *கலவன் பண்ணைக்கான தரப்படுத்துகை = கோழிகளின எண்ணிக்கை + (50 x (பன்றிகளின் எண்ணிகை + மாடுகளின் எண்ணிக்கை)) + 10 x (ஆடுகளின் எண்ணிக்கை))

20. 100 கனமீற்றர் அல்லது அதற்கு மேற்பட்ட களஞ்சியப்படுத்துகைத் திறன் கொண்ட பழம் அல்லது மரக்கறிகள் அல்லது இறைச்சி அல்லது வேறு உணவு களஞ்சியப்படுத்துகைகள்.
21. கொங்கிறீற்று முன்வார்ப்பு கைத்தொழில்கள்.
22. இயந்திரமயமாக்கப்பட்ட சீமெந்துக் குற்றிகள் உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள்.
23. நாளொன்றுக்கு 20 மெற்றிக்தொன்களுக்குக் குறைவான உற்பத்தித்திறன் கொண்ட சுண்ணாம்புச் சூளைகள்.
24. ஐந்துக்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுககமர்த்தப்படுகின்ற “பரிசுச் சாந்தை” மூலப்பொருளாகப்பயன்படுத்தும் ஏதேனும் கைத்தொழில்.
25. சுண்ணாம்புச் சிப்பி நொறுக்கும்/ கட்டியாக்கும் கைத்தொழில்கள்.
26. கூரை ஓடு மற்றும் செங்கல் சூளைகள்.
27. கண்ணாடி உருக்குதல் இன்றிய கண்ணாடிப்பொருட்கள் உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.
28. கருங்கல் வெட்டும் மற்றும் மெருகேற்றும் கைத்தொழில்கள்.
29. வெடிபொருட்களைப் பயன்படுத்தி ஒற்றைத்துளை தகர்ப்புடன் கைவினைசார் சுரங்கந்தோண்டும் செயற்பாடுகள்.

30. நாளொன்றுக்கு 25 கனமீற்றருக்கு குறைவான ஆலைத் திறன்கொண்ட மர ஆலைகள் அல்லது 5 அல்லது அதற்கு மேற்பட்டதும் 10 வேலையாட்களுக்குக் குறைவானவர்களும் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற விடத்து மரக்கட்டை அடிப்படையிலான கைத்தொழில்கள்.

31. மரத்தை பருவப்படுத்துவதற்காக மரக்கட்டையின் போரோன் பரிகரிப்பில் சம்பந்தப்பட்டுள்ள கைத்தொழில்கள்.

32. பலநோக்குக் தச்சு இயந்திரங்களைப் பயன்படுத்தும் தச்சு வேலைத்தளங்கள்.

33. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டதும் 10 வேலையாட்களுக்குக் குறைவானவர்களுமான வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற வதிவிட வசதிகள் இன்றிய ஹோட்டல்கள் அல்லது உணவு விடுதிகள் அல்லது வரவேற்புமண்டபங்கள் அல்லது பத்து அல்லது அதற்கு மேற்பட்டதும் 20 வேலையாட்களுக்குக் குறைந்ததுமான வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற உணவு தயாரிக்கும் இடங்கள் அல்லது உணவு பரிமாறுதல் சேவைகள்.

34. நாளொன்றில் 25 அல்லது அதற்கு மேற்பட்டதும் 100 ஆட்களுக்குக் குறைந்ததுமான இருப்பாட்சி மட்டம் காணப்படுகினறவிடத்து விடுதிகள் அல்லது அதனையொத்த வசிப்பிடங்கள்.

35. தீந்தை தெளித்தல் அல்லது நடமாடும் வசிச்சீராக்கிகளைப் பழுதுபார்த்தல் அல்லது பேணுதல் கராஜ்கள் பழுதுபார்த்தல் அல்லது பேணுதல் கராஜ்கள்.

36. வாகனப் பராமரிப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் இடங்கள் தவிர்ந்த கொள்கலன் சாலைகள்.

37. ஈயம் உருக்குதல் நீங்கலாக அச்சகங்களும் எழுத்து அச்சு இயந்திரங்களும்.

38. சடலங்களை நறுமணமூட்டிப் பாதுகாத்தலுடனான பிணவறைகள்.

39. வேலைமாற்றம் ஒன்றிற்கு 10 அல்லது அதற்கு மேற்பட்டதும் 50 வேலையாட்களை விடக் குறைவானவர்களும் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற மேலேயுள்ள இப்பட்டியலின் அட்டவணையின் பாகம் ‘‘ஈ’’ இல் உள்ளடக்கப்படாத ஏதேனும்செயற்பாடு/ கைத்தொழில்.

## அட்டவணை

## பரிசோதித்தற் கட்டணம்

| இல | தன்மை | 2025 ஆம் ஆண்டிற்கான அறவீடு ரூபா. சதம் |
|---|---|---|
| 1. | 250,000/=இற்கும் குறைவான முதலீடு | **3,472.22** |
| 2. | 250,000/= இற்கும் 500,000/= இற்கும் இடையிலான முதலீடு | 4,**305.56** |
| 3. | 500,000/= இற்கும் 1,000,000/= இற்கும் இடையிலான முதலீடு | **5,740.74** |
| 4. | 1,000,000/= இற்கும் 2,000,000/= இற்கும் இடையிலான முதலீடு | **11,527.78** |
| **5.** | 2,000,000/=இற்கும் மேலான முதலீடு | **23,009.26** |

## சான்றிதழ் கட்டணம்

| இல | தன்மை | 2025 ஆம் ஆண்டிற்கான அறவீடு ரூபா. சதம் |
|---|---|---|
| 01. | "D" தரத்திலான நிறுவனங்களுக்கு | **4500.00** |
| | சுற்றாடல் உரிமத்திற்கான விண்ணப்ப கட்டணம் | 500.00 |

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

## வவுனியா வடக்கு பிரதேச சபை

## உரிமக்கட்டணம் அறவீடு – 2025

**நி.க.இல 228**

1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 147,148,149,150 (1), (2), 151, 152(1), (2) 153(1), 154(1) ஆம் பிரிவுகட்கு அடக்கமாக 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை கீழே தரப்பட்ட அட்டவணையின் பிரகாரம் உரிமக்கட்டணம், தொழில் மீதான வரி அறவிடுவது என 228 ஆம் இலக்க **22.10.2024** ஆம் திகதிய நிர்வாக கட்டளைமூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உரிமக்கட்டணங்கள் அனைத்தும் அட்டவணையின் பிரகாரம் 31.03.2025 முன் செலுத்தப்படல் வேண்டும் என்பதனை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

## அட்டவணை

| இல | வியாபாரத்தின் தன்மை | 2025 ஆம் ஆண்டிற்கான அறவீடு ரூபா.சதம் |
|---|---|---|
| 01 | சிற்றுண்டிச்சாலை | 1000.00 |
| 02 | சாப்பாட்டுக்கடை | 1000.00 |

| | | |
|---|---|---|
| 03 | தேநீர்கடை, கோப்பிக்கடை | 1000.00 |
| 04 | சிகை அலங்கரிப்பு | 1000.00 |
| 05 | நாவிதன் நிலையம் | 1000.00 |
| 06 | அழகுக்கலை நிலையம் | 1000.00 |
| 07 | ஹோட்டல்கள் | 1000.00 |
| 08 | விடுதிகள் (உறங்குமனைகள்) | 1000.00 |
| 09 | வெதுப்பகம் | 1000.00 |
| 10 | சலவைச்சாலை | 1000.00 |
| 11 | நீச்சல் தடாகம் | 1000.00 |
| 12 | பனிக்கட்டித் தொழிற்சாலை | 1000.00 |
| 13 | குளிர்பானத் தொழிற்சாலை | 1000.00 |
| 14 | குளிர்பானக்கடை | 1000.00 |
| 15 | மீன்கடை | 1000.00 |
| 16 | கோழி இறைச்சிக்கடை | 1000.00 |
| 17 | ஆட்டிறைச்சிக் கடை | 1000.00 |
| 18 | ஐஸ்கிறிம் உற்பத்தி | 1000.00 |
| 19 | வெல்டிங் கராஜ் | 1000.00 |
| 20 | அரைக்கும் ஆலை | 1000.00 |
| 21 | அரிசி ஆலை | 1000.00 |
| 22 | கட்டடப் பொருட்கள் உற்பத்தி (சீமெந்து) | 1000.00 |
| 23 | தச்சுப்பட்டறை | 1000.00 |
| 24 | கருங்கல் உடைத்தல் | 1000.00 |
| 25 | கருங்கல் அரைத்தல் | 1000.00 |
| 26 | கருங்கல் உற்பத்தி பொருட்கள் | 1000.00 |
| 27 | கடைச்சல் வேலை | 1000.00 |
| 28 | செங்கல் உற்பத்தி | 1000.00 |
| 29 | சேவிஸ் ஸ்டேசன் | 1000.00 |
| 30 | மாட்டுப்பண்ணை வைத்திருத்தல் | 1000.00 |
| 31 | பால் சேகரிப்பு, பாற்பொருள் உற்பத்தி மற்றும் விற்பனை நிலையம் | 1000.00 |
| 32 | செல்லப்பிராணி நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 33 | புகையிலை பதப்படுத்தல் | 1000.00 |
| 34 | சுண்ணாம்புசூளை வைத்திருத்தல் | 1000.00 |
| 35 | சிற்றுண்டி, உணவு உற்பத்திகள் பொதியிடல் | 1000.00 |
| 36 | தென்னம்பொருள் உற்பத்தி | 1000.00 |
| 37 | அந்திமகால சேவை நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 38 | செயற்கை இரசாயன உரம் வைத்திருத்தல் | 1000.00 |
| 39 | கிருமிநாசினி வைத்து விற்பனை செய்தல் | 1000.00 |
| 40 | ஆடைத் தொழிற்சாலையொன்றினை நடாத்துதல் | 1000.00 |
| 41 | ஆடைக்கு பற்றிக் போடுதல் | 1000.00 |
| 42 | கொல்லுலையும், பட்டறையும் வைத்திருத்தல் | 1000.00 |
| 43 | சாதாரண கொல்லுலை வைத்திருத்தல் | 1000.00 |
| 44 | கயிறு அல்லது தும்பு உற்பத்தி செய்யும் நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 45 | கள்ளு சேகரிக்கும் நிலையமும், விற்பனை நிலையமும் | 1000.00 |

| | | |
|---|---|---|
| 46 | லேத் இயந்திரசாதன நிலையம் வைத்து நடாத்துதல் | 1000.00 |
| 47 | பற்றறி சார்ச் பண்ணும் நிலையம் வைத்து நடாத்துதல் | 1000.00 |
| 48 | அச்சகம் வைத்து நடாத்துதல் | 1000.00 |
| 49 | ரயர், ரீயூப், வால்கனஸ் செய்யும் நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 50 | மோட்டார் சைக்கிள் திருத்தும் இடம் வைத்திருத்தல் | 1000.00 |
| 51 | சுண்ணாம்பு பைக்கற் பண்ணலும், விற்றலும் | 1000.00 |
| 52 | நடமாடும் பொருட்களுக்குரிய வியாபாரம் (சைக்கிள்,நடை, சிறிய வண்டிகள் மூலம்) | 500.00 |
| 53 | நடமாடும் பொருட்களுக்குரிய வியாபாரம் (சிறு வண்டில்கள் தவிரந்த வான்போன்ற ஏனைய வாகனங்கள்) | 1000.00 |
| 54 | நடைபாதை வியாபாரத்திற்கான ஒருநாள் கட்டணம் | 100.00 |
| 55 | நடைபாதை வியாபாரத்திற்கான ஒருநாள் கட்டணம் (விளம்பர நோக்கத்திற்கானது) | 1000.00 |
| 56 | ஏனையவை | 1000.00 |
| 57 | வியாபார உரிமம் விண்ணப்ப கட்டணம் | 200.00 |

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

# வவுனியா வடக்கு பிரதேச சபை
# வியாபார வரி அறவீடு – 2025

**நி.க.இல 228**

1987ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 150(2),151,152(1),(2),153(1),154(1) ஆம் பிரிவுகட்கு அடக்கமாக 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம், 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை கீழே தரப்பட்ட அட்டவணையின் பிரகாரம் தொழில்கள், உயர்தொழில்கள் மீதான வரி அறவிடுவது என 228 ஆம் இலக்க **22.10.2024** ஆம் திகதிய நிர்வாக கட்டளைமூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வியாபார வரிகள் அனைத்தும் அட்டவணையின் பிரகாரம் 2025.03.31 ம் திகதிக்கு முன் செலுத்தப்படுதல் வேண்டும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

**2025 ம் ஆண்டிற்கான தொழில் எடுப்பனவுகள்....**

| | | |
|---|---|---|
| I. | ரூபா 6000.00 ஐ விஞ்சாதவிடத்து | இல்லை |
| II. | ரூபா 6000.00 ஐ விஞ்சி ரூபா 12000.00 ஐ விஞ்சாதவிடத்து | 90.00 |
| III. | ரூபா 12000.00 ஐ விஞ்சி ரூபா 18750.00 ஐ விஞ்சாதவிடத்து | 180.00 |
| IV. | ரூபா 18750.00 ஐ விஞ்சி ரூபா 75000.00 ஐ விஞ்சாதவிடத்து | 360.00 |
| V. | ரூபா 75000.00 ஐ விஞ்சி ரூபா 150000.00 ஐ விஞ்சாதவிடத்து | 1200.00 |
| VI. | ரூபா 150000.00 ஐ விஞ்சினால் | 3000.00 |
| VII. | விண்ணப்ப கட்டணம் | 200.00 |

## வியாபார வரி அறவீடு அட்டவணை – 2025

01. தரகு முகவர்கள்
02. ஏல விற்பனையாளர்கள்
03. அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர், படவரைஞர், கட்டிடக்கலைத்தொழில்
04. விளம்பர முகவர் தொழில்
05. பணம் கடனுக்கு வழங்குபவர்களின் வியாபாரமொன்றை நடாத்தல்
06. அடகுப் பொருட்களை பெறும் வியாபாரமொன்றை நடாத்துதல்
07. வழங்குனர்கள்
08. போக்குவரத்து சேவைகளை வழங்குதல்
09. சாரதி பயிற்சி நிறுவனமொன்றை நடத்துதல்
10. வங்கி நிதிக்கம்பனிகள் மற்றும் காப்புறுதிக்கம்பனிகளை நடாத்தல் (ஒவ்வொரு சேவைகளுக்கும் தனித்தனியானது)
11. தனியார் கல்வி நிறுவனமொன்றை நடாத்தல்
12. வேலை முகவர் வியாபாரமொன்றை நடத்தல் (உள்நாடு/வெளிநாடு)
13. நிபுணத்துவ வைத்திய சேவையொன்றினை நடாத்துதல்
14. ஆய்வுகூட வசதிகளுடன் கூடிய வியாபாரமொன்றை நடாத்துதல்
15. மருந்துகள் விற்பனை செய்யும் வியாபாரமொன்றை நடாத்துதல்

16. மருத்துவ நிலையம் நடத்துதல்
17. விழாப்பொருட்கள் வழங்கும் இடமொன்றை நடாத்துதல்
18. வரவேற்பு மண்டபமொன்றை நடாத்துதல்
19. வீட்டு வரைபடங்களை வரையும் நிறுவனமொன்றை நடாத்துதல்
20. லொத்தர் சீட்டுக்கள் விற்பனை இடமொன்றை நடாத்துதல்
21. எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை நடாத்துதல்
22. குடிநீர் நிரப்பும் நிலையமொன்றினை நடாத்துதல் மற்றும் விற்பனை செய்தல்
23. சிறப்புக் கடைத்தொகுதிகளை நடாத்துதல்
24. முகவர் தபாலகமொன்றை நடாத்துதல்
25. விற்பனைக் காட்சியறையொன்றினை நடாத்துதல்
26. ஏதேனும் ஒரு பொருளை உற்பத்தி செய்யும் ஒருவராக செயற்படுதல்
27. ஏதேனும் ஒரு பொருளை விநியோகிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
28. காஸ் மொத்த விற்பனை நிலையம் நடாத்துதல்
29. கணக்காளர் சேவை
30. கட்டட ஒப்பந்தகாரர் நிலையம் நடாத்துதல்
31. கூட்டுறவுச்சங்க விற்பனைக்கடைகள் நடாத்துதல்
32. சில்லறைக்கடை நடாத்துதல் தரம் A
33. சில்லறைக்கடை நடாத்துதல் தரம் B
34. இரும்புப்பொருட்கள் வைத்து விற்பனை
35. கட்டடப்பொருட்கள் வைத்து விற்பனை நிலையம்
36. 20 பைக்கட்டுக்களுக்கு மேல் சீமெந்து வைத்து விற்பனை செய்தல்
37. மரக்காலை அல்லது மரத்தளபாடம் வைத்து விற்பனை செய்தல்
38. விறகு காலை வைத்து நடாத்துதல்
39. மரக்கறிக் கடை வைத்து நடாத்துதல்
40. 1000 தேங்காய்களுக்கு மேல் வைத்து விற்பனை செய்தல்
41. ஆபரணங்கள் (பொன்) தயாரித்தல், பழுதுபார்த்தல், விற்பனை செய்தல்
42. கடலை விற்பனை நிலையம் வைத்திருத்தல்
43. சைக்கிள் திருத்துமிடம் வைத்திருத்தல்
44. சைக்கிள், வாகன உதிரிப்பாகம் விற்பனை செய்தல்
45. தொலைக்காட்சி, வானொலிப்பெட்டி, கணனி திருத்துமிடம்
46. மதுசாரம் விற்பனை
47. குசன் செய்யும் நிலையம் வைத்து நடாத்துதல்
48. தொலைக்காட்சி, வானொலி உதிரிப்பாக விற்பனை நிலையம்
49. கடிகாரம் திருத்தும் நிலையம்
50. புதிய சைக்கிள் விற்பனை நிலையம்
51. புடவை விற்பனை நிலையம் வைத்து நடாத்துதல்
52. பாதணிகள் விற்பனை நிலையம் வைத்து நடாத்துதல்
53. பெயின்ற், வானிஸ், டிஸ்ரெம்பர் வைத்து விற்பனை
54. படம் பிறேம்போடும் கடை வைத்திருத்தல்
55. பாட்டுகள் ஒலிப்பதிவு செய்யும் நிலையம் வைத்திருத்தல்
56. புத்தகங்கள், காகிதாகிகள் விற்பனை நிலையம் வைத்திருத்தல்
57. மணிக்கடை வைத்து நடாத்துதல்
58. கோழித்தீன் விற்பனை நிலையம் வைத்து நடாத்துதல்
59. தானியங்கள் விற்பனை செய்தல்
60. சீமெந்து பூக்கள் விற்பனை நிலையம் வைத்து நடாத்துதல்
61. ஆடைகள் தைக்கும் நிலையம் வைத்திருத்தல்
62. ஒலிபெருக்கி வாடகைக்கு விடும் நிலையம் நடாத்துதல்
63. தொலைத்தொடர்பு நிலையம் வைத்து நடாத்துதல்
64. மரணச்சடங்கு பொருட்கள் உற்பத்தி செய்தல் விற்றல்
65. திருமணப்பொருத்துநர் தரகு சேவை
66. கட்டடம் வயரிங் இணைப்பு வேலைகள் தொழில்
67. எலக்ரோணிக் மோட்டார் கொயில் ரீ-வைண்டிங்
68. நெட்கபே, இன்ரர்நெட், கணணி வகுப்புகள் நடாத்துதல்
69. CD கசற் விற்பனை செய்தல், வாடகைக்கு விடுதல்
70. வெற்றிலைக்கடை நடாத்துதல்
71. தனியார் உடல் வலுவூட்டல் பயிற்சி நிலையம்

72. இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல்
73. வியாபார விளம்பரம்
74. கிணறு, குழாய்கிணறு தோண்டும் தொழில்
75. கேபில் டி.வி சேவை செய்தல்
76. மனிதக் கழிவுகளுக்காக மயானத்தைப் பயன்படுத்துதல்
77. உணவுப் பொருட்கள் களஞ்சியம்
78. கட்டடப் பொருள் களஞ்சியம்
79. உயர் தொழில்கள்
80. தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான கட்டணம்
81. புகைப்பட நிலையம்
82. மிக்சர் விற்பனை
83. உற்சவகால விசேட வியாபார வரி
84. ஏனையவை

திருமதி சோ.மணிவண்ணன்,

செயலாளர்,

வவுனியா வடக்கு பிரதேசசபை,

நெடுங்கேணி.

24.12.2024.

## வவுனியா வடக்கு பிரதேச சபை
## உள்ளூராட்சி மன்றங்களின் மறுசீரமைப்பு சுற்றுநிருபத்திற்கு அமைவாக தொலைத்தொடர்பு கம்பங்களின் அறவீடு அறிவித்தல் - 2025

**நி.க.இல 228**

வவுனியா வடக்கு பிரதேச சபையின் அதிகார நிர்வாக எல்லைக்குட்பட்ட சகல வீதி ஓரங்களில் நாட்டப்படும் தொலைபேசிக்கம்பங்கள் அனைத்திற்கும் அறவிடற்பாலதான வியாபார அறவீட்டுக் கட்டணங்கள் அறவிடுவது தொடர்பாக, உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கை இணைப்பு 1 இல் பிரேரணைகளும் மற்றும் சிபார்சுகளும் என்ற பகுதியில் நிதி முகாமைத்துவம் வருமானங்களும் என்ற உப தலைப்பின் கீழ் இல 6.5 பகுதியில் தரப்பட்ட நிபந்தனைகளுக்கு அடங்கலாக தொலைபேசி கம்பங்களுக்கு வியாபார அறவீட்டு வரி ஒன்றை அறவீடு செய்வதாக 228 ஆம் இலக்க **22.10.2024** ஆம் திகதிய நிர்வாக கட்டளைமூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் கீழ்வரும் அட்டவணையின் பிரகாரம் தொலைத்தொடர்பு கம்பங்களுக்கான வரியினை 01.01.2025ஆம் திகதியில் இருந்து வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு செலுத்துதல் வேண்டும் என இத்தால் பகிரங்கப்படுத்தி அறியத்தரப்படுகின்றது.

| இல | தன்மை | அறவீடு<br>ரூபா.சதம் |
|---|---|---|
| 01. | 24 அடி கொண்ட தொலைபேசி கம்பம் ஒன்றிற்கு வருடம் ஒருதடவை | 120.00 |
| 02. | 24 அடிகொண்ட தொலைபேசி அமைவு பரிசோதனைக் கட்டணம் (ஆரம்பக்கட்டணம்) | 150.00 |
| 03. | தொலைத்தொடர்பு கோபுரம் புதிதாக நிர்மாணிப்பதற்கான<br>- மேவுகைக் கட்டணம்<br>- அபிவிருத்திக்கட்டணம் | <br>140,000.00<br>200,000.00 |

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

## வவுனியா வடக்கு பிரதேச சபை
## கழிவுப்பொருள் துப்பரவாக்கும் சட்டம் (126ம் அத்தியாயம்) கீழ் அறிவித்தல் – 2025

**நி.க.இல 228**

1987 ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு ஏற்ப 1024 ஆம் இலக்க 17.04.1998ல் ஏற்றுக்கொள்ளப்பட்ட 520/7 ஆம் இலக்க 23.08.1988ஆந் திகதிய நியமனத் துணைவிதியின் 9 ஆம் பிரிவில் ‘‘கழிவுப்பொருள் துப்பரவாக்கும் சேவை வழங்கப்படுகின்ற ஏழ்மை காரணமாக பிரதேச சபையினால் விலக்களிக்கப்பட்ட இருப்பாட்சியாளர் ஒருவர் தவிர்ந்த எவையேனும் வளவுகளில் இருப்பாட்சியாளர் பிரதேச சபையினால் விதந்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய துப்பரவாக்கும் கட்டணமொன்றை பிரதேச சபைக்கு மாதம் தோறும் செலுத்துதல் வேண்டும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1. | குப்பை அகற்றப்படும் இருப்பிடம் ஒன்றிற்கு மாதாந்தம் ரூபா | 600.00 |
| 2. | கடைகள், தேநீர்ச்சாலைகள் கழிவுகளின் அளவிற்கு ஏற்ப | 200.00-1800.00 |
| 3. | அரச தனியார் நிறுவனங்களுக்கு மாதம் ஒன்றிற்கு | 200.00-1800.00 |
| 4. | ஹோட்டல் தரத்திலான உணவகங்கள் மாதம் ஒன்றிற்கு | 1800.00-3000.00 |
| 5. | தொழிற்சாலைகளுக்கு | 3000.00 |
| 6. | கழிவகற்றல் பை (ஒன்று) | 30.00 |

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

## வவுனியா வடக்கு பிரதேச சபை

## 1987ம்ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 109(ஈ)பிரிவின் பிரகாரமான அறிவித்தல்-2025

**நி.க.இல 228**

குழாய்க்கிணறுகளுக்கான சேவைக்கட்டண அறவீடு வவுனியா வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் உள்ள சகல குழாய்க்கிணறுகள் சார்பிலும், குழாய்க்கிணறு ஒன்றினைப் பாவிக்கும் பாவனையாளர் குடும்பம் ஒன்று மாதாந்தம் ரூபா 20.00 சேவைக்கட்டணம் ஒன்றை 01.01.2025ம் திகதியில் இருந்து அறவிடுவதென 1987ம் ஆண்டின் 15ம் இலக்க கட்டளைச்சட்டத்தின் 109 (ஈ) இன் பிரகாரம் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

## வவுனியா வடக்கு பிரதேச சபை

## 1987ம்ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள்சட்டத்தின் 148 (4)ஆம் அட்டவணையின் பிரகாரமான வாகனங்கள் மீதான வரி அறிவித்தல்-2025

**நி.க.இல 228**

1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 148 (4) ஆம் அட்டவணையின் அடக்கமாக வவுனியா வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை வாகன

தரிப்பிட கட்டணம் கீழ்வருமாறு அறவிடுவது என 228 ஆம் இலக்க **22.10.2024** ஆம் திகதிய நிர்வாக கட்டளைமூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

**<u>அட்டவணை</u>**

| இல | தன்மை | 2025 ஆம் ஆண்டிற்கான அறவீடு ரூபா.சதம் |
|---|---|---|
| 1. | முச்சக்கர வண்டி தரிப்பிடம் மீதானவரி மாதாந்தம் | 300.00 |
| 2. | இரு சக்கர உழவு இயந்திரம் தரிப்பிடம் மீதானவரி மாதாந்தம் | 300.00 |
| 3. | நான்கு சக்கர உழவு இயந்திரம் தரித்து செல்லும் போது | 100.00 |
| 4. | ஒவ்வொரு பேரூந்து வண்டிக்கும் தரித்து செல்லும் போது | 50.00 |
| 5. | விற்பனை முகவர் வாகனங்கள் | 200.00 |
| 6. | கன்ரர் ரக வாகனங்கள் (மாதாந்தம்) | 300.00 |

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

## வவுனியா வடக்கு பிரதேச சபை
## 1987ம்ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள்சட்டத்தின்
## 148 (4)ஆம் அட்டவணையின் பிரகாரமான வாகனங்கள் மீதான வரி அறிவித்தல்-2025

**நி.க.இல 228**

1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 148 (4) ஆம் அட்டவணையின் அடக்கமாக 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை துவிச்சக்கர வண்டி உரிம கட்டணத்தினை ரூபா 100/= ஆக அறவிடுவது என. இதற்கமைவாக குறித்த கட்டணத்தை அறவிடுவதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

**அட்டவணை**

| இல | தன்மை | 2025ஆம் ஆண்டிற்கான அறவீடு ரூபா.சதம் |
|---|---|---|
| 01. | ஒவ்வொரு துவிச்சக்கர வண்டி உரிமம் வருடாந்தம் (விண்ணப்ப கட்டணம் உள்ளடங்கலாக) | 100.00 |

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

## வவுனியா வடக்கு பிரதேச சபை
## 1987ம்ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள்சட்டத்தின்
## அசைவற்ற சொத்துக்களுக்கான அறிவித்தல்-2025

**நி.க.இல 228**

1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 18 (ஆ) பாகம் 11 இ அட்டவணையின் அடக்கமாக எனக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்களுக்கு ஏற்ப வவுனியா வடக்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் காணப்படும் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களையும், சொத்துக்களையும், பொறுப்புக்கள் என்பவற்றையும் உரித்தாக்கல் தொடர்பில், எமது சபைக்குட்பட்ட மூலப்பொருட்களை அகழ்ந்து செல்வோரிடம் இருந்து ''விசேட அபிவிருத்திக் கட்டணம்'' ஒன்றினை கீழ்வருமாறு அறவிடுவதென 228 ஆம் இலக்க **22.10.2024** ஆம் திகதிய நிர்வாக கட்டளைமூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

| **இல** | **தன்மை** | **அறவீடு ரூபா.சதம்** |
|---|---|---|
| 01. | ஒரு கீப் கல்லு ஏற்றிச்செல்வதற்கு | 250.00 |
| 02. | ஒரு கீப் கிரவல் ஏற்றிச்செல்வதற்கு | 250.00 |
| 03. | ஒரு கீப் மணல் ஏற்றிச்செல்வதற்கு | 250.00 |
| 04. | ஒரு கீப் மக்கி ஏற்றிச்செல்வதற்கு | 250.00 |
| 05. | ஒரு கீப் களிமண் எற்றிச்செல்வதற்கு | 250.00 |

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

## வவுனியா வடக்கு பிரதேசசபை
## கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துதல் - 2025

**நி.க.இல 228**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 148 ஆம் பிரிவுக்கு உட்பட்ட வகையில் வவுனியா வடக்கு பிரதேச எல்லைக்கு உட்பட்ட பிரதான வீதிகளில் நடமாடும் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கு 228 ஆம் இலக்க **22.10.2024** ஆம் திகதிய நிர்வாக கட்டளைமூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறியத்தரப்படுகின்றது. பிரதான வீதியை உள்ளடக்கிய நகர்ப்பகுதியில் பகல், இரவு நேரங்களில் கட்டாக்காலி கால்நடைகள் நடமாடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய வீதிகளில் இரவு வேளையில் நடமாடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

கட்டாக்காலியாக பிடிபடும் கால்நடைகள் ஒவ்வொன்றுக்கும் தண்டப்பணத்தொகை ரூபா 3000.00, பராமரிப்பு செலவாக ஒரு நாளைக்கு ரூபா 200.00 உம் அறவிடப்படும். கயிறுக்கான கட்டணமாக ரூபா. 100.00 அறவிடப்படும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

**வவுனியா வடக்கு பிரதேசசபை**

**இடங்கள் தெரிவு செய்தல் - 2025**

**நி.க.இல 228**

வவுனியா வடக்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குள் பின்வரும் இடங்கள் நடைபாதை வியாபாரம் மேற்கொள்வதற்கு அனுமதிப்பதென 228 ஆம் இலக்க **22.10.2024** ஆம் திகதிய நிர்வாக கட்டளைமூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

**நடமாடும் மற்றும் ஒரு வாரத்திற்குற்பட்ட வியாபார நடவடிக்கைகளுக்கு**

நெடுங்கேணி :- கமநலசேவைகள் நிலையத்தில் இருந்து புதிய பஸ் தரிப்பு நிலையம்

கனகராயன்குளம் :- கனகராயன்குளம் மரக்கறிச்சந்தைக்குஅருகில்

புளியங்குளம் :- புளியங்குளம் எரிபொருள் நிரப்புநிலையத்திற்கு அருகில்

**வாகனதரிப்பிடம் (முச்சக்கர வண்டி)**

நெடுங்கேணி நகர் நாகதம்பிரான் ஆலயத்திற்கு அருகில்

நெடுங்கேணி ஒட்டுசுட்டான் சந்தி

நெடுங்கேணி பஸ்நிலையம், மரக்கறிச்சந்தை முன்பகுதி

நெடுங்கேணி மக்கள் வங்கி முன்பாக ( கன்ரர் வாகன தரிப்பிடம்)

புளியங்குளம் சந்தை முன்பகுதி

கனகராயன்குளம் சந்தி, கனகராயன்குளம் சந்தை முன்பகுதி

சம்பத்நுவர புத்தர்சிலை அருகாமையில்

அத்தாவெட்டுனுவெவ சந்தி

நயினாமடு சந்தி

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

# வவுனியா வடக்கு பிரதேசசபை
# இடங்கள் தெரிவு செய்தல் - 2025

**நி.க.இல 228**

1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 93,94,95 ஆம் பிரிவுக்கு உட்பட்ட வகையில் எனக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்களுக்கு ஏற்ப வவுனியா வடக்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குள் பின்வரும் இடங்கள் திண்மக்கழிவு புதைக்கும் செயற்பாடு மேற்கொள்வதற்கு 228 ஆம் இலக்க **22.10.2024** ஆம் திகதிய நிர்வாக கட்டளைமூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

**திண்மக்கழிவு புதைக்கும் இடம்**

நெடுங்கேணி:- பெரியமடு சூடுவெந்தான் வீதியில் இருந்து 2கி.மி அப்பால்

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

# வவுனியா வடக்கு பிரதேச சபை
# 1987ம்ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின்
# மலம் அகற்றுவதற்கான அறிவித்தல்-2025

**நி.க.இல 228**

1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 95 ம் இலக்க அட்டவணையின் அடக்கமாக எனக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்களுக்கு ஏற்ப வவுனியா வடக்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் காணப்படும் வீட்டு,நிறுவனங்களின் மலகூடங்களின் கழிவுகளை எமது வாகனங்களான கலிஎம்ரியர் மூலம் அகற்றுவது தொடர்பில் கட்டணம் ஒன்றினை 01.01.2025 ஆந் திகதியில் இருந்து கீழ்வருமாறு அறவிடுவதென 228 ஆம் இலக்க **22.10.2024** ஆம் திகதிய நிர்வாக கட்டளைமூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பதை இத்தால் பகிரங்கப்படுத்தி அறியத்தரப்படுகின்றது.

| இல | தன்மை | அறவீடு ரூபா.சதம் |
|---|---|---|
| 01. | கலிஎம்ரியர்மூலம் மலம் அகற்றல் கட்டணம் | 9000.00 |

(15km தூரத்திற்கு வெளியில் உள்ள பகுதிகளுக்கு 9000.00 உடன் 1KMக்கு 100.00 ரூபா வீதம் அறவிடப்படும்.)

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

## வவுனியா வடக்கு பிரதேசசபை
## இடங்கள் வரையறை செய்தல் - 2025

**நி.க.இல 228**

வவுனியா வடக்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குள் மரக்கறி மற்றும் மீன் சந்தைகள் குத்தகை அடிப்படையில் வழங்கப்படுவதால் சந்தைகளில் இருந்து 500m சுற்றுவட்டாரப்பகுதியில் மரக்கறி, மீன், கோழி, இறைச்சி வியாபாரம் விற்பனை செய்வதை தடைசெய்தல் என 228 ஆம் இலக்க **22.10.2024** ஆம் திகதிய நிர்வாக கட்டளைமூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

# வவுனியா வடக்கு பிரதேச சபை
# 1987ம்ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள்சட்டத்தின்
# 148 (4)ஆம் அட்டவணையின் பிரகாரமான வாகனங்கள் மீதான வாடகை வரி அறிவித்தல் - 2025

**நி.க.இல 228**

1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 148 (1), (2), (3), (4), (5), (6), (7) ஆம் அட்டவணையின் அடக்கமாக 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை பின்வருமாறு கட்டணத்தை அறவிடுவதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

| | |
|---|---|
| 01. மோட்டர் கிரேடர்(ஒரு மணித்தியாலத்திற்கு. (போக்குவரத்திற்கு கட்டணம் உள்ளடங்களாக) | 9000.00 |
| 02. ஜேசிபி (ஒரு மணித்தியாலத்திற்கு, (போக்குவரத்திற்கு கட்டணம் உள்ளடங்களாக) | 8000.00 |
| 03. ரோலர்(ஒரு மணித்தியாலத்திற்கு (எற்றிச்செல்லும் வாகனத்திற்கு மணித்தியாலத்திற்கு 1500.00) | 6500.00 |
| 04. டிரக்ரர் பெட்டியுடன் (நாள் ஒன்றிற்கு- 6 மணி நேரம்) | 14000.00 |
| 05 டிரக்ரர் பெட்டியுடன்(1/2 நாள் ஒன்றிற்கு – 3 மணி நேரம்) | 7500.00 |
| 06. டிரக்ரர் பௌசருடன் (நாள் ஒன்றிற்கு- 6 மணி நேரம்) | 15000.00 |
| 07. டிரக்ரர் பௌசருடன்(1/2 நாள் ஒன்றிற்கு – 3 மணி நேரம்) | 8000.00 |
| 08. நீர்ப்பம்மி கிணறு சுத்திகர்ப்பதற்கு இயந்திரம் மற்றும் மனிதவளம் (ஒரு நாளுக்கு) | 2500.00 |
| 09. டிரக்ரர் திண்மக் கழிவு அகற்ற (ஒரு தடவைக்கு) | 5000.00 |
| 10. பௌசர் (தனியாக) நீருடன் தரித்திருப்பதற்கு பிணைப்பணம் 5000.00 உள்ளடங்கலாக | 11000.00 |
| 11. பௌசர் (தனியாக) நீரின்றி தரித்திருப்பதற்கு பிணைப்பணம் 5000.00 உள்ளடங்கலாக | 8000.00 |

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

# வவுனியா வடக்கு பிரதேசசபை
# 1987ம்ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின்
# நீர் வழங்கலுக்கான அறிவித்தல்-2025

**நி.க.இல 228**

1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 114,115,116,117,118 ஆம் அட்டவணையின் அடக்கமாக எனக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்களுக்கு ஏற்ப வவுனியா வடக்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் காணப்படும் வீடு,நிறுவனங்களில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை ஊனமுற்றோர் தவிர்ந்த ஏனையோருக்கு பின்வருமாறு கட்டணத்தை அறவிடுவதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

1) குடிநீர் ஒரு லீட்டர் ரூபா 2.00 வீதம் அறவிடப்படும்

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

**வவுனியா வடக்கு பிரதேசசபை**
**1987ம்ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின்**
**கலாச்சார மண்டபத்திற்கான வாடகை அறிவித்தல்-2025**

**நி.க.இல 228**

1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 102(1),(2) ஆம் அட்டவணையின் அடக்கமாக எனக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்களுக்கு ஏற்ப வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான கலாச்சார மண்டபத்திற்கான வாடகை என தீர்மானிக்கப்படுகின்றது.
மேலும் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை பின்வருமாறு கட்டணத்தை அறவிடுவதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

| **இல** | **தன்மை** | **அறவீடு ரூபா.சதம்** |
|---|---|---|
| 01. | கலாச்சார மண்டபத்திற்கான ஒருநாள் வாடகை | 20,000.00 |

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

## வவுனியா வடக்கு பிரதேசசபை
## 1987ம்ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின்
## களியாட்ட வரி அறவிடுவதற்கான அறிவித்தல்-2025

**நி.க.இல 228**

1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 102(1),(2) ஆம் அட்டவணையின் அடக்கமாக எனக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்களுக்கு ஏற்ப வவுனியா வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் களியாட்ட நிகழ்வுகள் நடாத்துவதற்கான கட்டணங்கள் என அறியத்தரப்படுகின்றது.

மேலும் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை பின்வருமாறு கட்டணத்தை அறவிடுவதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

| இல | தன்மை | அறவீடு ரூபா.சதம் |
|---|---|---|
| 01. | களியாட்ட நிகழ்வுகள் நடாத்துவதற்கான ஒரு நாளிற்கான கட்டணம் (நகர்ப்பகுதி மற்றும் நகர்ப்புறம் அல்லாத பகுதி) | 5,000.00 |
| 02. | களியாட்ட வரி விண்ணப்ப கட்டணம் | 1000.00 |

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.

# வவுனியா வடக்கு பிரதேசசபை
# விண்ணப்ப கட்டணங்களை அறவிடுவதற்கான அறிவித்தல்-2025
# ஏனைய கட்டணங்கள் - 2025

**நி.க.இல 228**

| இல | தன்மை | அறவீடு ரூபா.சதம் |
|---|---|---|
| 1. | உயர்தொழில் மீதான வரி அறவீட்டு விண்ணப்ப படிவ கட்டணம் | 1000.00 |
| 2. | பட வரைஞர் பதிவு மீள் பதிவு கட்டணம் | 1000.00 |
| 3. | உணவு கைளாளும் பணியாளர்களுக்கான மருத்துவ பரிசோதனை விண்ணப்ப கட்டணம் | 100.00 |
| 4. | உணவு கைளாளும் பணியாளர்களுக்கான மருத்துவ பரிசோதனை சேவைக் கட்டணம் | 150.00 |
| 5. | மாடு அறுவை அனுமதிக் கட்டணம் | 250.00 |
| 6. | மாடு அறுவை விண்ணப்ப கட்டணம் | 150.00 |
| 7. | மாட்டிறைச்சிக் கடை நாள் வாடகை | 500.00 |
| 8. | விளையாட்டு மைதான வாடகை நாள் ஒன்றிற்கு | 2000.00 |
| 9. | பிரதேச சபைக்கு சொந்மான வீதிகளில் அகழிகள் தோண்டினால் அதனை செப்பனிடுவதற்கான கட்டணம் (ஒரு கன மீட்டருக்கானது) | |
| | I. கொங்கிறீற் பாதை | 2600.00 |
| | II. தார்ப்பாதை | 3500.00 |
| | III. மண் பாதை | 1500.00 |
| | IV. கார்ப்பற் பாதை | 3500.00 |
| 10. | நூலக அங்கத்துவ கட்டணம் | இலவசம் |
| 11. | நூலக அங்கத்துவம் புதுப்பித்தல் கட்டணம் | இலவசம் |
| 12. | நூலகத்தில் இரவல் வழங்கும் பகுதியில் புத்தகங்கள் மீள ஒப்படைப்பதில் ஏற்படும் கால தாமதத்திற்கான தண்டப்பணம் (நாள் ஒன்றிற்கு) | 2.00 |

திருமதி சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை,
நெடுங்கேணி.
24.12.2024.